உ

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

தலைவர் (President):
மாணிக்கம் தவயோகராஜா
Manickam Thavayogarajah
Phone: 0112695120 (Res)
Mobile: 0777786686
mthavam@gmail.com

பொதுச் செயலாளர் (General Secretary):
வேலுப்பிள்ளை கந்தசாமி
Velupillai Kandasamy
Phone: 0112586620 (Res)
Mobile: 071-5349150
vkandasami@gmail.com

பொருளாளர் (Hony. Treasurer):
அ. கயிலாசபிள்ளை
Abirami Kailasapillai
Phone: 0112575566 (Res)
Fax : 0112575472
hariomak@gmail.com

08-03-2021

**செய்திக் குறிப்பு**

## ஆன்ம ஈடேற்றத்திற்குகந்த மகாசிவராத்திரி விரதம்

**- அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மகா சிவராத்திரி செய்தி-**

உலகெங்கும்இந்துக்கள் மகாசிவராத்திரி விரத தினத்தன்று வழிபாடுகளில் ஈடுபட்டு மன அடக்கத்தையும் ஆன்மீக பலத்தையும் அதிகரிக்கச் செய்து எல்லாம்வல்ல பரம்பொருளின் அருளைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான உத்தமமான ஒரு விரத நாளே இந்த மகாசிவராத்திரி விரத நாளாகும்.

கடந்த பல மாதங்களாக உலகை நிலைதடுமாறச் செய்துள்ள கொரோணா எனும் தொற்றுநோயின் தாக்கத்தினால் முன்புபோல இந்த ஆண்டு இந்துக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்வதில் சில வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளது. அதனால், மக்கள் மிகவும் சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து சிவராத்திரி விரதத்தினை பக்திபூர்வமாக அனுட்டிக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றது. அரசு விடுத்துள்ள சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை மனதிற்கொண்டு கொரோணாவின் பிடியில் அகப்பட்டுவிடாமல் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப் புனிதமான - புண்ணியமிகுந்த மகாசிவராத்திரி விரத தினத்தில் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் இறை சிந்தையுடனும் வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவருளை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்

தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி (T.Phone) : 0112434990 இணையம் (web) : www.hinducongress.lk தொ.நகல் (Fax) : 0112344720
மின்னஞ்சல் (e-mail) : hinducongress@gmail.com